RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 315 | நவம்பர்.15 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘ஜனநாயக அமைப்புகள் மீது பழி சுமத்தியவர்களுக்கு பாடம்’ பிஹார் தேர்தல் முடிவுகள் குறித்து இபிஎஸ் கருத்து

சென்னை: நவ.15-

ஜனநாயகத்தை காக்கும் அமைப்புகள் மீது பழி சுமத்திய இண்டியா கூட்டணிக்கு பிஹார் மக்கள் தக்க பாடம் புகட்டியுள்ளார்கள் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. பெரும்பான்மைக்கு 122 இடங்கள் வெற்றி தேவை எனும் நிலையில், பாஜக ஐக்கிய ஜனதா தளம் அடங்கிய என்டிஏ கூட்டணி முன்னிலை வகித்து வருகிறது. அதேசமயம், ராஷ்டிரிய ஜனதா தளம் காங்கிரஸ் அடங்கிய மகா கூட்டணி கடும் பின்னடைவை சந்தித்து வருகிறது.





இந்நிலையில், இது குறித்து எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில், “ஜனநாயகத்தை காக்கும் அமைப்புகள் மீது பழி சுமத்திய இண்டியா கூட்டணிக்கு பிஹார் மக்கள் தக்க பாடம் புகட்டியுள்ளனர். மேலும், ஜனநாயக அமைப்புகளை தளர்த்தும் முயற்சிகளை பிஹார் மக்கள் உறுதியாக நிராகரித்துள்ளனர். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, முதல்வர் நிதிஷ்குமாருக்கு என் வாழ்த்துகள். இந்த வெற்றி பிஹாரின் முன்னேற்றத்தை மேலும் வேகப்படுத்தும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஆணையத்தை கண்டித்து நவ.16ல் தவெக ஆர்ப்பாட்டம்: விஜய் பங்கேற்பதாக தகவல்

சென்னை, நவ.15-

தேர்தல் ஆணையத்தை கண்டித்து தவெக சார்பில் வரும் 16ம் தேதி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில், அக்கட்சியின் தலைவரான நடிகர் விஜய் கலந்து கொள்ள உள்ளார்.



தமிழகம், மேற்குவங்கம், கேரளா உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி நவம்பர் 4 முதல் ஒரு மாதம் நடத்தப்படும் என அண்மையில் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து, அதற்கான பணியும் முடுக்கி விடப்பட்டது. இதற்கு திமுக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் அண்மையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைமையில் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது என முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, கடந்த 3ம் தேதி உச்சநீதிமன்றத்தில் திமுக வழக்கு தொடர்ந்தது. இதேபோல், மேலும் சில மாநில கட்சிகள் சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது. இதுஒருபுறம் இருக்க அதிமுக சார்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என அக்கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு பாஜக, அதிமுக உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது.

தவெக இந்த விவகாரத்தில் மவுனம் காத்து வந்தது. இந்நிலையில், அந்த கட்சியும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலம் முழுவதும் வரும் 16ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளது. இந்த முடிவை விஜய் எடுத்துள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். இதையடுத்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. சென்னையை பொருத்தவரை ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற உள்ளது. இதற்கு போலீஸாரிடம் அனுமதியும் கேட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் நடிகர் விஜய் ஏதாவது ஒரு மாவட்டத்தில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## மேகேதாட்டுவில் அணை கட்ட உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளதாக வெளியான தகவல் தவறு: துரைமுருகன் விளக்கம்

சென்னை, நவ.15-

மேகேதாட்டுவில் அணை கட்ட உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாக வெளியாகும் தகவல் களில் உண்மையில்லை என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: காவிரி ஆற்றின் குறுக்கே 67 டிஎம்சி கொள்ளளவு கொண்ட அணையை மேகேதாட்டுவில் அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை கர்நாடக அரசு தன்னிச்சையாகத் தயாரித்து, மத்திய நீர்வளக் குழுமத்துக்கு 2018ல் சமர்ப்பித்ததை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்காகத் தேவைப்படும் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கைக்கான ஆய்வு வரம்புகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தை கர்நாடக அரசு கடந்த 2020ம் ஆண்டு அணுகியபோது, மற்றொரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்தியது.

தொடர்ந்து, கர்நாடக அரசின் பட்ஜெட்டில் மேகேதாட்டு திட்டத்துக்கு ரூ.1,000 கோடியை ஒதுக்கியபோது, தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அனுமதி அளிக்கக்கூடாது என்று மத்திய அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் 2022 மார்ச் 21ல் தீர்மானம் நிறைவேற்றியது.

மேலும், பிரதமர் மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின், 2022 மார்ச் 31, மே 26ம் தேதிகளில் சந்தித்தபோது, மேகேதாட்டு திட்டத்துக்கு அனுமதியளிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். இந்த காலகட்டத்தில், காவிரி நீர்மேலாண்மை ஆணையத்துக்கு, கர்நாடக அரசின் கருத்துருவை பரிசீலிக்க அதிகாரம் உள்ளது என



மத்திய அரசு தெரிவித்தது. இதை எதிர்த்து 2022 ஜூன் 7ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது.

இவ்வாறு தமிழக அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளால் தற்போதுவரை காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், மேகேதாட்டு அணை குறித்து விவாதிக்கப்படவில்லை. மேலும், தமிழக அரசு எடுத்த பல்வேறு தொடர் முயற்சிகளால், மேகேதாட்டு கருத்துருவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர்வளக் குழுமத்துக்கு திருப்பியனுப்பியது.

இந்நிலையில், மேகேதாட்டு குறித்து பேசிய கர்நாடக முதல்வர், 202526ல் தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய நீரின் அளவை விட கூடுதலாக நீர் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேகேதாட்டு அணையால் தமிழகத்துக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ள கூற்று எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல.

அதிக மழைப்பொழிவு இருக்கக்கூடிய ஆண்டுகளில் வேறுவழியின்றி தமிழகத்துக்கு கர்நாடக அரசு நீரைத் திறந்து விடுகிறதேயன்றி, வறட்சி ஆண்டுகளில் நமக்கு விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுக்கான நீர் வழங்கப்படுவது இல்லை. இந்நிலையில், இந்த அணை தொடர்பான வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம், ‘மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்கும் தமிழக அரசின் கருத்துகளை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் மத்திய நீர்வளக் குழுமத்திடம் தெரிவிக்கலாம் என்றும், தமிழக அரசின் கருத்துகளைக் கேட்காமல் எந்தவொரு முடிவும் எடுக்கக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமும், மத்திய நீர் வளக் குழுமத்தின் முன்பும் தமிழக அரசு தனது வலுவான வாதங்களை முன்வைக்க உள்ளது. இதற்கிடையே, மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டதாக சில தவறான தகவல்கள் வெளிவருவது கண்டிக்கத்தது. இந்த தகவலில் எள்ளளவும் உண்மையில்லை.

காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைகளை திமுக அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. காவிரியின் குறுக்கே புதிய அணை கட்டு வதற்கான கர்நாடக அரசின் அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நித்யானந்தா ஆசிரமங்களில் இருந்து சீடர்களை வெளியேற்றும் உத்தரவுக்கு உயர் நீதிமன்ற மதுரை அமர்வு தடை

மதுரை, நவ.15-

ராஜபாளையத்தில் நித்யானந்தா ஆசிரமங்களில் இருந்து, அவரது சீடர்களை வெளியேற்றும் உத்தரவை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நித்யானந்த தியான பீட அறங்காவலர் சந்திரசேகரன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: ராஜபாளையம் அருகே சேத்தூர் மற்றும் கோதைநாச்சியாபுரம் கிராமத்தில் உள்ள மருத்துவர் கணேசன் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் நித்யானந்தா ஆசிரமங்கள் செயல்பட்டு வந்தன.

இந்த ஆசிரமங்களில் தங்கியுள்ள பெண் சீடர்களை வெளியேற்றுமாறு கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவின் பேரில் நித்யானந்தா ஆசிரமங்களில் உள்ள பெண் சீடர்களை வெளியேற்ற ராஜபாளையம் டிஎஸ்பி நடவடிக்கை எடுத்து வருகிறார். கோட்டாட்சியர் உத்தரவுக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருக்கும்போது, ஆசிரமங்களில் இருந்து யாரையும் வெளியேற்றக்கூடாது.

எனவே, நித்யானந்தாவின் சீடர்களை ஆசிரமங்களில் இருந்து வெளியேற்றும் கோட்டாட்சியரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி எல்.விக்டோரியா கௌரி, நித்யானந்தாவின் ஆசிரமங்களிலிருந்து, அவரது சீடர்களை வெளியேற்றுவது தொடர்பாக கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

## கான்பூர் மருத்துவரிடம் உ.பி. போலீஸார் விசாரணை

கான்பூர், நவ.15-

டெல்லி குண்டுவெடிப்பு வழக்கு தொடர்பாக கான்பூரைச் சேர்ந்த மருத்துவரைப் பிடித்து உத்தரபிரதேச மாநில போலீஸார் விசாரித்து வருகின்றனர்.



டெல்லி செங்கோட்டை அருகே கடந்த 10ம் தேதி காரில் குண்டு வெடித்ததில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை விசாரித்து வரும் தேசிய விசாரணை முகமை(என்ஐஏ) போலீஸார் பலரைப் பிடித்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் டெல்லி குண்டிவெடிப்புடன் தொடர்புடையதாக உத்தரபிரதேச மாநிலம் கான்பூரைச் சேர்ந்த ஜிஎஸ்விஎம் மருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் டாக்டர் முகமது ஆரிப்பை(32) தீவிரவாத எதிர்ப்புப் படை போலீஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

இவர் எம்பிபிஎஸ் படித்து முடித்த நிலையில், மருத்துவ மேல்படிப்பு(கார்டியாலஜி) படித்து வருகிறார். அவரது செல்போன், லேப்டாப் உள்ளிட்டவற்றை போலீஸார் பறிமுதல் செய்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இவருக்கும் தொடர்புடையதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். டாக்டர் முகமது ஆரிப், ஜம்முகாஷ்மீரின் அனந்த்நாக் பகுதியைச் சேர்ந்தவர். இந்த வழக்கில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ள டாக்டர் ஷாஹீன் சயீதுடன் இவர் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார்.

மேலும் டெல்லி செங்கோட்டை குண்டுவெடிப்பு சம்பவம் நடந்தபோது, டாக்டர் ஷாஹீனுடன் தொடர்பில் உள்ளவர்களுடன் டாக்டர் ஆரிப் செல்போனில் பேசி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது. இவர் தற்போது டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

வீட்டு மாடியில் மனித கை: டெல்லி செங்கோட்டை அருகே குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த 4 நாட்களான நிலையில் நேற்று மனிதக் கை ஒன்று குண்டு வெடித்த இடத்தில் கிடைத்துள்ளது. குண்டுவெடித்த இடம் அருகே உள்ள ஜெயின் கோயிலுக்கு பின்புறமுள்ள ஒரு வீட்டின் மேற்பகுதியில் இருந்து இந்த சிதிலமான கை கண்டெடுக்கப்பட்டது. இதையடுத்து என்ஐஏ அதிகாரிகள் அதைக் கைப்பற்றி, ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்த கை யாருடையது என்பது குறித்து தடய வியல் அறிவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

## திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுமா? அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, நவ.15-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கும் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடக் கோரிய மனுவுக்கு, தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




மதுரை ஏழுமலையைச் சேர்ந்த ராம ரவிக்குமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: முருகனின் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு திருப்பரங்குன்றம். திருப்பரங்குன்றம் மலை வழக்கில் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கார்த்திகை திருவிழாவில் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் அல்லாமல், பிள்ளையார் கோயில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்ற முடிவு செய்யப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது சட்டவிரோதம், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. இந்த ஆண்டு கார்த்திகை திருவிழாவில் திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபத்தை ஏற்றவும், உச்சிப்பிள்ளையார் கோயில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான அறிவிப்பை ரத்து செய்தும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பாக விசாரணைக்கு வந்தது. இந்து சமய அறநிலையத் துறை சார்பில், தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கும் நோக்கத்தில் திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் தீபம் ஏற்றும் திட்டம் முடிவு செய்யப்படவில்லை எனக் கூறப்பட்டது. அப்போது நீதிபதி, யாரை கண்டு பயப்படுகிறீர்கள்? என கேள்வி எழுப்பினார். பின்னர் மனு தொடர்பாக அறநிலையத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நவ.19க்கு தள்ளிவைத்தார்.

## எஸ்ஐஆர் படிவத்தை நிரப்ப திமுகவினர் உதவுவதில் என்ன தவறு? கேட்கிறார் அமைச்சர் கே.என்.நேரு

சென்னை, நவ.15-

எஸ்ஐஆர் படிவத்தை நிரப்பித்தர மக்களுக்கு திமுகவினர் உதவுவதில் எந்தத் தவறும் இல்லை என்று அமைச்சர் கே.என் .நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 13 இடங்களில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அமைச்சர் கே.என்.நேரு ரூ.406.63 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது: எஸ்ஐஆர் கணக்கெடுப்புக்கு வாக்குச்சாவடி முகவர்கள் செல்லலாம் என தேர்தல் ஆணையமே அனுமதி கொடுத்துள்ளது. அதில் என்ன தவறு உள்ளது? மற்ற கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் வருவதை யாரும் தடுப்பதில்லை. படிவத்தை நிரப்பித் தர திமுகவினர் உதவுவதில் எந்த தவறும் இல்லை. அதிமுகவினர் உதவி செய்ய செல்லவில்லை என்றால் திமுகவினரும் செல்ல கூடாது என்று கூறினால் எப்படி? நாளை ஒருவேளை வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் ஆட்சியில் இருப்பவர்கள் ஏன் இதை கவனிக்கவில்லை என்று எங்கள் மீதுதான் குற்றம் சாட்டுவார்கள். நாங்கள் சரியாகத் தான் இப்பணிகளை செய்து வருகிறோம். மத்திய அரசு ஜல்ஜீவன், நூறு நாள் வேலை திட்டம், மெட்ரோ, ஜிஎஸ்டியில் பங்கு என எதற்கும் நிதி ஒதுக்குவதில்லை. ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 12 திட்டங்கள் நிதி ஒதுக்காததால் செயல்படுத்த முடியாமல் உள்ளது. அவர்கள் திட்டங்கள் கொடுத்தால் நாங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறோம்.

‘திமுக நல்லவர் போல் நடிப்பதை நாடே பார்த்து சிரிக்கிறது’ என தவெக தலைவர் விஜய் கூறுகிறார். விஜய்க்கு வேண்டுமானால் திமுக ஆட்சி, நல்லவர்கள் போல வேஷம் போடுவது போல தெரியலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு, திமுகவும், திமுக ஆட்சியும், முதல்வரும் நல்லவர்களாகவே தெரிகிறார்கள். திமுக நல்லவர் போல வேஷம் போடவில்லை. உண்மையாக நல்லவர்களாக இருப்பதால்தான் அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்கள் அனைவரும் முதல்வரை வரவேற்கிறார்கள். 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் மீண்டும் திமுகவே ஆட்சிக்கு வரும். 210 தொகுதிகளில் வெல்வோம் என கூறும் அதிமுகவினர் மீதி உள்ள 20 தொகுதிகளை ஏன் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. திருப்பதி கோயிலுக்கு ரூ.44 லட்சம் நன்கொடை வழங்கியது குறித்து விமர்சிக்கிறார்கள். நான் பணம் கட்டுகிறேன். ஏன் கட்டக் கூடாதா? நான் திருப்பதி கோயிலுக்கு ரூ.44 லட்சம் நன்கொடை வழங்கியது குறித்து விமர்சனம் செய்பவர்கள் செய்யட்டும். விமர்சனம் செய்பவர்கள் எல்லாரும் என்னை நல்லவன் என்று சொல்வார்களா? என்றார்.



# சிவகங்கை சட்டமன்ற தொகுதி திமுக வழக்கறிஞரணி ஆலோசனைக் கூட்டம்

## வழக்கறிஞர் பாஸ்கரன், ஒசெ. ஜெயராமன், புதுக்கோட்டை சண்முகம், இளம் பேச்சாளர் ஞா. சந்தியா பங்கேற்பு

சிவகங்கை, நவ.15-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் பணிகளை மனதில் கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் கால பணிகளில் ஈடுபட்டு வரும் வேளையில் ஆளும்கட்சியான திமுக மற்ற அரசியல் கட்சிகளை பின்னுக்குத் தள்ளி கடந்த சில மாதங்களுக்கு முன்னரே தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட திமுக வழக்கறிஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் பாஸ்கரன் தலைமையிலும் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் , வழக்கறிஞர் கோதண்டராமன் ஆகியோரது முன்னிலை யிலும் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிவகங்கை சட்டமன்ற தொகுதி தலைமைக்கழக பார்வையாளரும், கழக விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளரும், புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான வழக்கறிஞர் சண்முகம் கலந்து கொண்டு எஸ் ஐ ஆர் எனப்படும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் உள்ளிட்ட தேர்தல் கால பணிகள் குறித்த விளக்கவுரை நிகழ்த்தினார்.

இந்த கூட்டத்தில் வழக்கறிஞர்கள் கழக இளம் பேச்சாளர் ஞா. சந்தியா , பழனிச்சாமி, பில்லூர் கார்த்தி, சக்கந்தி முருகன் , சித்தலூர் பா. ஆனந்த க்குமார், மலைச்சாமி, உமாபதி, கண்ணன், காமராஜ் பாண்டியன், தினேஷ் பாண்டியன், பிறைசூடன், மகேந்திரக்குமார் உள்ளிட்ட கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் இறுதியில் மாவட்ட திமுக மாணவரணி மேனாள் துணை அமைப்பாளர், சித்தலூர் பா. ஆனந்தக்குமார் நன்றி கூறினார்.

# உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு ஆர். டி .தர்மராஜ் மருத்துவமனை மற்றும் சிசம்பள்ளி இணைந்து பள்ளி மாணவ மாணவிகள் சார்பாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது




தேனி, நவ.15-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் கட்டபொம்மன் சிலை அருகே உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு சர்க்கரை நோயால் மனிதருக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகளை பற்றி முழக்கம் இட்டும் பதாகைகள் ஏந்தியவாறு கட்டபொம்மன் சிலையில் இருந்து காமராஜர் சாலை வழியாக ஊர்வலமாக மாணவ மாணவியர்கள் சென்றனர். இதனை மருத்துவர் அன்புச் செழியன், ரவீந்திரநாத், கௌரிசங்கர் துவக்கி வைத்தனர், இந்நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சி மாவட்டத் தலைவர் ராஜபாண்டியன், போடி நகரத் தலைவர் சித்ராதேவி, விவசாய அணி மாவட்ட தலைவர் தண்டபாணி, நகர பொதுச்செயலாளர் வாழவந்தான் மணி, நகரச் செயலாளர் மதன், பொதுச் செயலாளர் சிவகுருநாதன் மாவட்டத் துணைத் தலைவர் மோகன்தாஸ், தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் வளர்ச்சி பிரிவு மாவட்ட தலைவர் சந்திரசேகர், தெய்வேந்திரன் நகரத் துணைத் தலைவர் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்விழா ஏற்பாட்டினை ஆர். டி. தர்மராஜ் மருத்துவமனை சிசம்பள்ளி இணைந்து நடத்தியது.

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்குதல், சிறந்த பள்ளிகளுக்கு விருதுகள் வழங்குதல், குழந்தைகள் தினம் ஆகிய முப்பெரும் விழா

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்குதல், சிறந்த பள்ளிகளுக்கு விருதுகள் வழங்குதல், குழந்தைகள் தினம் ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், அன்பில் மகேஸ்பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வரவேற்றார். துணை முதல்வர் உதயநிதி பேசியதாவது: தமிழகம் முழுவதும் 5.35 கோடி சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. இதில் 57,000 மாணவிகள், மாணவர்கள் விட கூடுதலாக பெறுகின்றனர். இதற்கு அதிக மாணவிகள் பள்ளியில் சேர்ந்து படிப்பது தான் காரணம். இது தான் திராவிட மாடல் அரசின் வெற்றி. அக்காலக்கட்டத்தில் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். படிக்க உரிமை கிடையாது. அனைத்து பெண்களையும் படிக்க வைத்தது திராவிட இயக்கம். நூறு ஆண்டுகள் போராட்டம், தியாகத்துக்கு பிறகு தான் இந்தநிலையை அடைந்தோம். ஒரு குடும்பத்தின் ஏழ்மைநிலையை போக்க கூடியது கல்வி.

பொருள், பணத்தை மட்டும் கொடுப்பது அல்ல கல்வி, அதோடு நம்பிக்கையையும், அற்றலையும் தருகிறது. அதனால் தான் இந்தியாவிலேயே அதிக திட்டங்களை கல்வித்துறையில் தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். மாணவர்கள் சிந்தனை ஆற்றலை வளர்த்து கொள்ள வேண்டும். பெரியவர்களை விட அதிக சிந்திக்க கூடியவர்கள் குழந்தைகள் தான். சொல்லபோனால், பெற்றோருக்கே குழந்தைகள் தான் ஆசிரியர்கள்.

பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் தொடர்ந்து பகுத்தறிவை வலியுறுத்தினர். பகுத்தறிவு என்றால் ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்வியை கேட்டு கொண்டே இருக்க வேண்டும். தொடர்ந்து கேள்வி கொண்டே இருந்தால் தான் தெளிவான பதில் கிடைக்கும். அதனால் தான் இந்தியாவிலேயே கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது. உலக நாடுகளோடு போட்டியிட கூடிய அளவுக்கு தமிழகத்தை உயர்த்த வேண்டும்.

அதற்கு மாணவர்கள் விட முயற்சியுடன் படிக்க வேண்டும். சிந்திக்கும் திறனை வளர்த்து கொள்ள வேண்டும். பள்ளிகளில் 22 லட்சம் குழந்தகளுக்கு காலை உணவுத் திட்டம் வழங்கப்படுகிறது. தமிழ் புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள் மூலம் 8 லட்சம் கல்லூரி மாணவர்கள் மாதம் ரூ.1,000 பெறுகின்றனர். விரைவில் கல்லூரிகளில் இலவச லேப்டாப் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

நான் முதல்வன் திட்டம் யுபிஎஸ்சி தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்றவற்றில் ரீல்ஸ் பார்க்கிறோம். ரீல்ஸ் வாழ்க்கை கிடையாது. அதில் வருவது எல்லாம் முக்கால்வாசி பொய் தான்.

ரியலாக கல்விதான் கை கொடுக்கும். கல்வியோடு சேர்ந்து விளையாட்டுக்கும் முக்கியத்தும் கொடுக்க வேண்டும். கல்வியில் முன்னேறினால் குடும்ப பொருளாதாரம் முன்னேறும். அது மூலம் தமிழகமும் முன்னேறும். ஆசிரியர்கள் உடற்கல்வி பாடவேளையை கடன் வாங்கி மற்ற பாடங்களை நடத்த வேண்டாம். முடிந்தால் மற்ற பாடவேளையையும் உடற்கல்விக்கு கொடுத்து உதவ வேண்டும். மாணவர்களுக்கு படிப்பு எந்த அளவுக்கு முக்கியமோ, அந்தளவுக்கு உடல் ஆரோக்கியம் முக்கியம். இவ்வாறு அவர் பேசினார்.





# கீழக்கோட்டையில் குழந்தைகள் தினவிழா கொண்டாட்டம்: ஜவஹர்லால் நேருவுக்கு புகழாரம்




காளையார் கோவில், நவ.15-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளி கீழக்கோட்டையில் குழந்தைகள் தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்து ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறினார்கள். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி இந்திய திருநாட்டின் முதல் பிரதம அமைச்சர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளை குழந்தைகள் தினமாக கொண்டாடுவதின் சிறப்புகள் குறித்து எடுத்து கூறினார். தன்ஷிகா நானிஸ்வரன் கவிதை வாசித்தனர். நந்திகா சிவப்பிரியா பாடல் பாடினர். அஸ்வின் ஆங்கில உரை நிகழ்த்தினார். கிருத்திஷ் தமிழ் உரையாற்றினார். மாணவ மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பருவத்தில் 100 சதவீதம் வருகைபுரிந்த ஆஷா பிரதாப் ஸ்ரீவெனிஷா தருண் தாரணி அஸ்வின் ஆகியோர் பாராட்டப் பட்டனர். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியை வாசுகி வாழ்த்துரை வழங்கினர். மாணவ மாணவிகளின் திறமைகள் வெளிக் கொணரப்பட்டது. நேரு மாமா முகமூடி அணிந்து மாணவர்கள் புகழாரம் சூட்டினர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா பெற்றோர் காவியா சத்யா கலந்துகொண்டு சிறப்பித்தனர்.







■ கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் கூடலூர் நகராட்சியில் 1கோடி 41.70 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழாவை கூடலூர் நகராட்சி தலைவர் அ.அறிவரசு கலந்துகொண்டு துவங்கி வைத்தார். இதில் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார் சாலை அமைத்தல், மழைநீர் வடிநீர் கால்வாய் ,கான்கிரீட் தளம் அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், சிறு பாலம் அமைத்தல், கம்பி வேலி ஆகிய பல திட்டங்களை கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு துவக்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஆணையாளர் பூவேந்திரன்,நகர மன்ற துணைத் தலைவர் ரதி ராஜேந்திரன்,நகராட்சி பொறியாளர் சோமசுந்தரம் ,26வது வார்டு கவுன்சிலர் கீர்த்தனா,26 வார்டு செயலாளர் உதயகுமார்,நகர துணை செயலாளர் துரை செந்தில்,கட்சி நிர்வாகிகள்,உறுப்பினர்கள்,நகர மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா 107 வது நிறுவன தின விழா






கோவை, நவ.15-

கோவை நவ இந்தியா பகுதி இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி டாக்டர் அப்துல் கலாம் அரங்கில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா 107வது நிறுவன தின விழா கோவை மண்டல தலைவர் எஸ்.ஏ.ராஜ்குமார் மற்றும் பிராந்திய தலைவர் எஸ்.எஸ்.லாவண்யா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான யூனியன் பேங்க் ஆப் இந்தியா, 11-11-1919 அன்று சேத் சீதாராம் பொதார் நிறுவினார். அன்று மகாத்மா காந்தியால் துவக்கி வைக்கப்பட்டது. வங்கியின் 107வது நிறுவன தின விழா கோவை, மும்பை உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகமாக கொண்டாடிவருகின்றனர்.

மும்பை விழாவில் நிதித்துறை சேவைகள் செயலர் நாகராஜு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வளரும் பாரதத்தின் தொலை நோக்கு இயக்கத்திற்கு உதவிடும் இயக்கத்தின் இந்த ஆண்டின் கருப்பொருளான ஒன்றிணைந்து ஒளிரும் எதிர்காலத்தை உருவாக்குவோம் என்ற தலைப்பில் உரையாற்றி யுள்ளதாகவும் இந்நிகழ்விற்கு வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் ஆஷீஸ் பாண்டே தலைமை தாங்கியுள்ள நிகழ்ச்சியில் செயற்குழு இயக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளதாக வங்கியின் சார்பில் தெரிவிக் கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வங்கி பணியாளர்களின் இசைக்கச்சேரி நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் வாடிக்கையாளர்கள், வங்கி பணியாளர்கள் மேனாள் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா



காளையார் கோவில், நவ.15-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தைகள் தின விழா நடைபெற்றது. குழந்தைகள் தின விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். மாணவர்கள் ஹசீனா, தேஜிகா, சரோபினா, ஜெஸ்மிதா, மற்றும் லிஸ்டினா ஆகியோர் ஜவஹர்லால் நேருவைப் பற்றி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசினர். எல்கேஜி மற்றும் யுகேஜி மாணவர்கள், ஜெப ஜோபின், தமிழ் யாழினி, பிரனிகா ,ஆன்றோ ரீகன், ரெல்சின் செல்வி, ஜெரோலின்,லிஸ்பன்ஆரோ ஜெப்ரினா, ஜெப மகிழினி, கர்ஷிதா கனி ஆகியோர் நேருவேடம் அணிந்து நேருவைப் பற்றி உரையாற்றினர். பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் நேருவின் வாழ்க்கை வரலாறு பற்றி எடுத்துரைத்தார். குழந்தைகள் தின விழாவிற்கு பள்ளி அளவில் போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாணவர் களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளி மேலாண்மைக் குழு சார்பாக அனைத்து மாணவர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றி உரை கூறினார். விழாவில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர், தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள்,சத்துணவு பொறுப்பாளர்கள், காலை சிற்றுண்டி திட்ட பொறுப்பாளர்கள், முன்னாள் மாணவர்கள் கிராம பொதுமக்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# வேலூரில், மாவட்ட அளவிலான கூட்டுறவுத் துறை சார்பில் 72 ஆம் அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா

## ஆட்சியர், எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

வேலூர், நவ.15-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர் தனியார் திருமண மண்டபத்தில், மாவட்ட அளவிலான 72ம் அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சமி தலைமையில் நடைபெற்றது. இதில் ஆட்சியர் சிறப்புரையாற்றி விழாவை தொடங்கி வைத்து, 2757 பயனாளிகளுக்கு ரூ.20.69 கோடி மதிப்பிலான கடனுதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் எம்பி எம்.பி.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார் (அணைக்கட்டு), கார்த்திகேயன் (வேலூர்), அமுலு விஜயன் (குடியாத்தம்), மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சா.திருகுணஐயப்பதுரை, மாமன்ற உறுப்பினர் டீடா சரவணன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், அரசு திட்டங்களின் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முடிச்சூர் பகுதியில் உள்ள Foto World புகைப்பட நிலையம் 4ஆவது புதிய கிளை திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

தாம்பரம், நவ.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூர் பகுதியில் உள்ள Foto World புகைப்பட நிலையம் தனது 4ஆம் புதிய கிளை திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சி தாம்பரம் மாநகர மகளிர் அணி அமைப்பாளரும் வரி விதிப்பு மற்றும் நிதிகுழு தலைவருமான ரமணி ஆதிமூலம் தலைமையில் Foto World உரிமையாளர் கருணாநிதி கெங்கம்மாள் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வண்ணமயமான அலங்காரங்கள், வரவேற்பு ஏற்பாடுகள் மற்றும் பொதுமக்களின் ஆர்வமான பங்கேற்பு ஆகியவற்றால் நிகழ்வு சிறப்பாக அமைந்தது.

மேலும் மக்கள் நலனில் செயல்பட்டு வருபவர்களில் ஒருவரான தாம்பரம்



தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் திறந்து வைத்தார்.

அதேபோல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான மீ.அ. வைத்தியலிங்கம், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்று, புதுப்பிக்கப்பட்ட ஸ்டுடியோ வசதிகளை நேரடியாக பார்வையிட்டனர். புகைப்படம், வீடியோ, ஸ்டுடியோ சேவைகள் ஆகிய துறைகளில் தரமான சேவைகளை வழங்கி வரும் Foto World புதிய கிளை துவக்கத்தை ஒரு மைல்கல்லாக கொண்டாடியுள்ளது.

புதிய வசதிகள் தொடக்கத்துடன், வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவைகள் வழங்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தாம்பரம் பகுதியில் நடைபெறும் தொழில் மற்றும் வணிக முன்னேற்றத்தில் Foto World போன்ற நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இதனுடன், 4ஆம் ஆண்டு திறப்பு விழா பொதுமக்கள் பங்கேற்பால் மகிழ்ச்சியான சூழலில் நிறைவுற்றது.

இதில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி லோகநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆதிமாறன், கழக பேச்சாளர் வேலு மணி, ஒன்றிய கவுன்சிலர் விசாலாட்சி, 11வது வார்டு உறுப்பினர் புனிதா ராஜா, மஞ்சு ஜெயபால், மணிகண்டன், பி.எஸ்ரமேஷ், வி.ஆர். குமார், சத்யா சந்திரன் மேலும் உள்ளூர் பகுதிகளில் செயற்பட்டு வரும் பல சமூக அமைப்பு தலைவர்கள், தொழிலதிபர்கள், மற்றும் இளைஞர் முன்னோடிகள் ஆகியோரின் பெயர்களும் போஸ்டரில் இடம் பெற்றுள்ளன. அவர்கள் அனைவரும் Foto World நிறுவனம் தொடர்ந்து வளர வேண்டும் என்பதற்கான நல்வாழ்த்துகளை பகிர்ந்துள்ளனர்.

# தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழை நீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

தென்காசி, நவ.15-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழை நீர் சேமிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவர்களைக் கொண்டு மழை நீர் சேகரிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பேரணியானது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திலிருந்து தென்காசி புதிய பேருந்து நிலையம் வழியாக இ.சி.ஈஸ்வரன் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் 150க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் மழை நீர் சேகரிப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இவ்விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நோக்கம் "மழைநீர்



கட்டமைப்பை ஏற்படுத்தி, முறையாக பராமரித்து மழைநீரை சேகரிக்க வேண்டும். மழைநீரை சேகரிப்பதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு மட்டுமல்லாமல் நிலத்தடிநீரின் தரம் மேன்மையடையும். மேலும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்படும், பருவமழை காலம் தொடங்குவதற்கு முன்னதாக கண்மாய்கள், குளங்கள், ஊரணிகள், ஏரிகள், பழமை வாய்ந்த நீராதாரக் கட்டமைப்புக்களை ஆழப்படுத்தி மேம்படுத்த வேண்டும். நீரின் பயன்பாட்டிற்கும், நீரின் செறிவூட்டலுக்கும் இடையே உள்ள இடைவெளியை களைய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவ வேண்டும். அவ்வாறு நிறுவப்பட்ட கட்டமைப்புகளை புனரமைத்து நிலவளம், நீர்வளம் காக்க வேண்டும். வீடுகளில் மழைநீர் சேகரிப்பு வீட்டுக்கூரையை, மழைக்காலத்திற்கு முன் சுத்தப்படுத்த வேண்டும். காய்ந்த இலை சருகுகளை அப்புறப்படுத்த வேண்டும். மழைநீர் கொண்டு வரும் குழாய்களில் ஏற்படக்கூடிய அடைப்புகளை நீக்கி, பழுதுகளை சரி செய்ய வேண்டும். மேலும், வடிகட்டி தொட்டியில் உள்ள கூழாங்கற்கள் மற்றும் ஜல்லிக்கற்கள் ஆகியவற்றை சுத்தம் செய்து, மீண்டும் நிரப்ப வேண்டும். சேமிப்புத் தொட்டி சுத்தம் செய்ய ப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட வேண்டும். வீட்டுக் கூரையின் மேல் விழும் மழைநீரை, வடிகுழாய் மூலம் கொணர்ந்து மணல்வடிப்பானில் செலுத்தவேண்டும்.

குடிசை வீடாக இருந்தால், கூரையின் மேல்பாலிதீன் மேல்விரிப்பு அமைத்து, அதன் மேல் விழும் மழைநீரை சேகரிக்கலாம். மொட்டை மாடியில் விழும் மழைநீரை, குழாய்கள் மூலம் வடிகட்டும் குழிக்குள் செலுத்தி, பின்னர் குழாய் மூலம் கிணற்றில் விடவேண்டும். மேலும், உபயோகத்தில் இல்லாத ஆழ்துளைக் குழாய் கிணற்றையும் பயன்படுத்தி, மழைநீரை பூமிக்குள் செலுத்தலாம். எனவே, பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி, மழைநீரை வீணாக்காமல் சேமித்து பயன்பெற வேண்டும்" என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணியாளர்கள் குடிநீரின் தரம் மற்றும் பரிசோதனை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் திரு.எஸ்.இளங்கோ, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி அ.ரேணுகா, தலைமை ஆசிரியர் திரு.ராமசாமி, உதவி நிர்வாகப் பொறியாளர் திரு.எம்.அர்ஜுன், உதவிப்பொறியாளர் திரு.ம.அஜின், நிலநீர்ஆய்வாளர் திரு எஸ். முத்துகிருஷ்ணன், திருமதி. ஜாஸ்மின், திட்ட அலுவலர் திரு. பாலசுப்பிரமணியன், நாட்டு நலப்பணித் திட்ட மாவட்ட தொடர்பு அலுவலர் திரு.வைகுண்டசாமி, மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## காரைக்குடியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்,

# அரசு பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மதுவிற்கு அடிமையாகி, மது கடைகளில் குடியிருப்பதாக கூறி, துணை முதல்வர் மற்றும் அமைச்சர்களை சங்கடத்தில் ஆழ்த்திய மாணவிக்கு குவியும் பாராட்டு

காரைக்குடி, நவ.15-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி பள்ளியில் தமிழக அரசு சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் துவக்க விழா, குழந்தைகள் தின விழா மற்றும் சிறந்த பள்ளிகளுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மிதிவண்டி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் கேடயமும் பரிசு கோப்பையும் வழங்கி கௌரவித்தார். அப்போது பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் அருகே மரக்காத்தூர் அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் யோகேஸ்வரியை பேச வாய்ப்பு அளித்தார். அப்போது கனீர் குரலால் அனைவரையும் கவரும் விதமாக தமிழ் வழியில் பயின்ற அரசு பள்ளி மாணவி என்ற தலைப்பில் பேசி கைதட்டலை பெற்றார். பேச்சின் போது, அரசு பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மதுவிற்கு அடிமையாகி மதுபான கடைகளில் குடியிருப்பதாகவும், இவர்களால் எப்படி தங்களது குழந்தைகளை நல்ல கல்வியாளர்களாக்க முடியும் என பேசியது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்களை நெளிய செய்தது. பின்னர் அந்த மாணவிக்கு, குழந்தைகள் வாழ்க என்ற புத்தகத்தில், அன்பு யோகேஸ்வரிக்கு வாழ்த்துக்கள் என எழுதி தனது கையெப்பமிட்டு வழங்கினார். துணை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் முன்பு துணிவாக பேசிய மாணவிக்கு பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா2025ஐ முன்னிட்டு திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து, உறுதிமொழி ஏற்பு மற்றும் மரக்கன்றுகள் நடுதல் ஆகிய நிகழ்வுகளை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் சிறப்பித்தார்

திருக்கோஷ்டியூர் நவ15-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில், நேற்று (14.11.2025) மாவட்ட ஆட்சயர் கா.பொற்கொடி, தலைமையில் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து, உறுதிமொழி ஏற்பு மற்றும் மரக்கன்றுகள் நடுதல் ஆகிய நிகழ்வுகளை துவக்கி வைத்து சிறப்பித்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சி பெற்றிடும் வகையில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வியத்தகு சாதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, கூட்டுறவுவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி பொதுமக்களை பயன்பெறச் செய்து வருகிறார்கள்.

அந்தவகையில், தமிழகம் முழுவதும் கூட்டுறவுத்துறையின் சார்பில் நேற்று 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா2025 சிறப்பாக தொடங்கப்பட்டுள்ளது.

அதன்படி, 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவானது திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குடப்பட்ட திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் கூட்டுறவு கொடி ஏற்றி வைக்கப்பட்டும், உறுதிமொழி ஏற்கப்பட்டும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, சென்னை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய வளாகத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் ஆகியோர் அவர்களுடைய அலுவலகங்களிலும் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து, உறுதிமொழி ஏற்கவுள்ளனர்.

கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகள், நோக்கம், செயல்படுத்தப்படும்





திட்டங்களின் பயன்கள் குறித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், அதன் மூலம் கூட்டுறவில் அனைவரும் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலும், ஒவ்வொரு ஆண்டும் "நவம்பர் 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை, அனைத்திந்திய கூட்டுறவு வார விழா" இந்திய அளவில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவில், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களும், வங்கிகளும் மிக நீண்ட வரலாற்றையும், சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டதாகத் திகழ்வதால், தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு வார விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா இன்றையதினம் தொடங்கி வருகின்ற 20.11.2025 வரை பல்வேறு சிறப்பான நிகழ்வுகளுடன், இவ்வாண்டு கூட்டுறவு வார விழா "தற்சார்பு இந்தியா" என்ற முதன்மைமையக் கருப்பொருளின் அடிப்படையில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

14.11.2025 முதல் 20.11.2025 வரை நடைபெறும் கூட்டுறவு வார விழாவில், செயல்திறன், பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் டிஜிட்டல் மயமாக்கல் மாற்றத்தை ஊக்குவித்தல், திரிபுவன் சககர் பல்கலைக்கழக ஆய்வு மற்றும் பயிற்சியின் மூலம் கூட்டுறவு கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்துதல், கூட்டுறவுகளின் மூலம் கிராமப்புற முன்னேற்றத்தை வலுப்படுத்துதல், தேசிய கூட்டுறவு கொள்கைக் சுற்றுச்சூழல் அமைப்பே இந்திய கூட்டுறவு வளர்ச்சிக்கான கட்டமைக்கப்பட்ட வழிகாட்டி, கூட்டுறவு தொழில் முனைவு மூலம் இளைஞர்கள், பெண்கள் மற்றும் நலிந்த பிரிவினர் ( கைவினைப் பொருட்கள், கைத்தறி, தொழிலாளர், மீன்வளம் போன்றோர்) ஆகியோரை மேம்படுத்துதல், சுற்றுலா, சுகாதாரம், பசுமை ஆற்றல், கூட்டுறவு தளங்கள், சிறிய அளவிலான கூட்டுறவுகள் போன்ற புதிதாக உருவாகும் துறைகளின் கூட்டுறவுகளை விரிவுபடுத்துதல், உலகளாவிய போட்டித் திறனை நோக்கி புதுமையான கூட்டுறவு வணிக மாதிரிகளை உருவாக்குதல் என ஒவ்வொரு நாளும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் 72வது கூட்டுறவு வார விழா இவ்வாண்டு தமிழகம் முழுவதும் கொண்டாடப்படவுள்ளது.

இக்கூட்டுறவு வார விழா கொண்டாடத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு நாளும் மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகளும், கூட்டுறவு சங்கங்களின் திட்டங்களை விளக்கும் சிறப்பு முகாம்களும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எளிதில் கடன் பெறுவதற்கு ஏதுவான சிறப்பு முகாம்களும், கூட்டுறவு வங்கிகளில் வங்கி கணக்குகள் துவங்குவதற்கான சிறப்பு முகாம்களும், இரத்ததான முகாம்களும், கால்நடை மருத்துவ முகாம்களும், கட்டுரை மற்றும் பேச்சு போட்டிகளும், கூட்டுறவு தயாரிப்புகளின் கண்காட்சி மற்றும் விற்பனை போன்ற போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

அதன் தொடக்கமாக, இன்றையதினம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு துவக்கி வைக்கப்பட்டு, கூட்டுறவாளர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அடித்தட்டு மக்கள் பயன்பெறுகின்ற வகையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, ஒன்றிய அரசின் கூட்டுறவுத்துறையினை தன்வசம் வைத்துள்ள உள்துறை அமைச்சர் அமித்ஷா பாராட்டை பெற்றுள்ளதும் சிறப்பிற்குரியதாகும்.

கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்கள் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. எனவே, கூட்டுறவுத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், மேலாண்மை இயக்குநர் (மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) உமா மகேஸ்வரி, துணை பதிவாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கைதேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல் திட்டத்தின்படி, முதன்மை மாவட்ட நீதிபதி அறிவுரையின்படியும், சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில், சிவகங்கை கேந்திரா வித்யாலயா பள்ளியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர்/சார்பு நீதிபதி V.ராதிகா தலைமையில் 'தேசிய சட்டப்பணிகள் தினம்' மற்றும் மகளிர்க்கான சட்ட உதவிகள் குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சார்பு நீதிபதி பேசும்போது தெரிவித்ததாவது. தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 5 கமிட்டிகளின் பணிகள் குறித்தும், பெண்களுக்கு சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சட்ட உதவிகள் குறித்தும், போதை ஒழிப்பு, குழந்தை திருமணம் நிகழ்வினை தடுக்க மாணவர்கள் முன்வர வேண்டும் எனக் கூறினார். நிகழ்ச்சியில் பள்ளியின் முதல்வர் திரு. மனோஜ்குமார் சர்மா, குழந்தைகள் நலக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள்.



## வேலூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் குழந்தை திருமண தடுப்பு குறித்த விழிப்புணர்வு

வேலூர், நவ.15-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பழைய பேருந்து நிலைய வளாகத்தில், வேலூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் குழந்தை திருமண தடுப்பு குறித்த விழிப்புணர்வு, இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு தொடங்கி வைத்து, விழிப்புணர்வு சார்ந்த பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர்சுஜாதா ஆனந்தகுமார், 2 வது மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர்.நரேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி மண்டலம் 2, காகிதப்பட்டறையில் புதிய பயணிகள் நிழற்கூடம் திறப்பு விழா: வேலூர் எம்.எல்.ஏ. பங்கேற்று திறந்து வைப்பு

வேலூர், நவ.15-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி மாநகராட்சி மண்டலம் 2, ஆற்காடு சாலை, 28 வது வார்டு, காகிதப்பட்டறையில் பொதுமக்களின் நலன் கருதி வேலூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு பொதுநிதியிலிருந்து சுமார் ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் புதிய பயணிகள் நிழற்கூட கட்டிடத்தை வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப, கார்த்திகேயன், பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, இனிப்புகள் வழங்கி பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி 2வது மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன், பகுதி கழக செயலாளர் தயாள்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மம்தா குமார், எம். சேகர், டி.சக்கரவர்த்தி, மாலதி சேகர், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சுகுமாரன், வட்ட பிரதிநிதி விஜயரங்கன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பலராமன், உமா சந்திரன், ஜெயகாந்தன், கருணாகரன், உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் ஒப்பந்ததாரர் சி.என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ராஜ சீனிவாசன், தணிகாசன், வட்ட திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பழனியில் போக்குவரத்து துறையும் ட்ராபிக் காவல்துறை இணைந்து பெர்மிட் இல்லாத ஆட்டோக்களை பறிமுதல் செய்தனர்

திண்டுக்கல், நவ.15-



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் டிராபிக் போலீஸ், வட்டார போக்குவரத்து துறை இணைந்து ஆட்டோக்களின் ஆவணங்களை சரிபார்த்தனர். இதில் பெர்மிட் இல்லாத 3 ஆட்டோக்கள் பிடிபட்டது. பழனி ஆர்ப் ரோடு. கான்வென்ட் ரோடு. ஸ்கூல் பகுதிகள். ரயில்வே நிலையம். வணிக வளாகம். பஸ் நிலையம் போன்ற பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான ஆட்டோக்கள் இயங்கி வருகின்றன. வரி ஏய்ப்பு செய்து ஆட்டோக்கள் ஒடுவதாக கிடைத்த தகவலின்பேரில் பழனி டிராபிக் இன்ஸ்பெக்டர் ஜெய் சிங் மற்றும் பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஸ்ரீதர் இணைந்து பழனியில் பல இடங்களில் பலசோதனை செய்தனர். 30 க்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் சோதனை செய்யப்பட்டன . அதில் 3 ஆட்டோக்களில் பெர்மிட் இல்லாமல் ஓடியது கண்டுபிடிக்கப்பட்டு மோட்டார் வாகன ஆய் வாளர் பறிமுதல் செய்தார் . ஒவ்வொரு ஆட்டோவிற்கும் தலா ஆயிரத்திற்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டது. நீண்ட நாட்களுக்கு பின் வட்டார போக்குவரத்து துறையும், டிராபிக் போலீசாரும் இது போன்ற சோதனையை நடத்தி உள்ளனர். இந்த சோதனையில் டிராபிக் எஸ்.. ஐ கவிதா. எஸ் எஸ் ஐ. உள்ளிட்ட டிராபிக் போலீசார் ஈடுபட்டனர்.

## ரோபோடிக் அறுவை சிகிச்சை மூலம் 47 வயது பெண்ணுக்கு 4.95 கிலோ கருப்பை கட்டியை அகற்றி கிளெனீகல்ஸ் மருத்துவமனை சாதனை




பெரும்பாக்கம், நவ.15-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கத்தில் ( 13:நவ) 2025: மருத்துவ உலகில் புதியதொரு சாதனையாக, சென்னையிலுள்ள கிளெனீகல்ஸ் மருத்துவமனை, மிகப்பெரிய கருப்பை நார்திசுக் கட்டி ஒன்றை ரோபோடிக் கருப்பை நீக்க சிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றி சாதனை படைத்துள்ளது. ரோபோடிக் கருப்பை நீக்கம் என்பது கருப்பையை அகற்றுவதற்கான ஒரு குறைந்தபட்ச ஊடுருவும் அறுவை சிகிச்சை முறையாகும், இதில் ரோபோ கைகளைப் பயன்படுத்தி சிறிய கீறல்கள் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்படும். இந்த சிகிச்சை மூலம் முன்னெப்போதும் இல்லாத பெரிய 4.95 கிலோ எடையும், 36 வார கர்ப்ப கால அளவையும் ஒப்பிடக்கூடிய கருப்பை கட்டியை, இம்மருத்துவமனையின் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ பிரிவு இயக்குனரும், ரோபோடிக் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் பத்மப்ரியா விவேக், அதிநவீன டா வின்சி ஜீமி அறுவை சிகிச்சை முறையைப் பயன்படுத்தி அகற்றி உள்ளார்.

சென்னையை சேர்ந்த பள்ளி ஆசிரியை ரம்யா என்ற 47 வயது நோயாளிக்கு வயிறு வீக்கம் மற்றும் கனமான அறிகுறிகள் இருப்பது தெரிய வந்தது. இந்த நிலையில் கிளெனீகல்ஸ் மருத்துவமனைக்கு வந்த அவருக்கு எம்ஆர்ஐ இமேஜிங் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது அவருக்கு 12 முதல் 20 சென்டிமீட்டர் வரையிலான பெரிய கருப்பை நார்த்திசுக் கட்டிகள் இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, ரோபோ உதவியுடன் மொத்த கருப்பை நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. பெரிய கட்டியின் காரணமாக ரத்த நாளங்களின் தன்மையால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதிலும், இந்த செயல்முறை மிகத் துல்லியத்துடன் பாதுகாப்பையும் வழங்கி உள்ளது.

டாக்டர் பத்மப்ரியா விவேக் தலைமையிலான அறுவை சிகிச்சை நிபுணர் குழு, குறைந்த ரத்த இழப்பு மற்றும் எந்த சிக்கலும் இல்லாமல் 4 மணி நேரத்திற்குள் இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தது. இதில் குறிப்பிடத்தக்க அம்சமாக, அறுவை சிகிச்சை முடிந்த அடுத்த நாள் காலை நோயாளி மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். ரோபோடிக் அறுவை சிகிச்சை மூலம் இவ்வளவு பெரிய நார்த்திசுக்கட்டியை அகற்றுவதால் ஏற்படும் பொதுவான ஆபத்துகள், சிறுநீர் குழாய் மற்றும் குடல் காயங்கள் ஏதுமின்றி இது வெற்றிகரமாக செய்யப்பட்டது.

இது குறித்து டாக்டர் பத்மப்ரியா விவேக் கூறுகையில், இந்த சாதனை, மிகவும் சவாலான மகளிர் மருத்துவ நிகழ்வுகளில் ஒன்றாகும். ரோபோ உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சையின் ஒப்பற்ற துல்லியம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை இது காட்டுகிறது. உலகின் சிறந்த ரோபோடிக் முறை எங்களிடம் இருப்பதால், பெரிய நார்த்திசுக் கட்டிகளின் குறைந்தபட்ச ஊடுருவும் அறுவை சிகிச்சைக்கு இது ஒரு புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதன் காரணமாக நோயாளிகள் வேகமாக இயல்பு நிலைக்கு திரும்புவதோடு மருத்துவமனையில் அதிக நாள் தங்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தார்.

அறுவை சிகிச்சை குழுவினரின் சிறப்பான செயல்பாட்டை பாராட்டி கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் தலைமை செயல்பாட்டு அதிகாரி மற்றும் மருத்துவமனைத் தலைவர் நிரஞ்சனி கூறுகையில், இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்த டாக்டர் பத்மப்ரியா விவேக் மற்றும் அவரது குழுவினரை நினைத்து நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். அதிநவீன தொழில்நு பங்கள் மூலம் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவையை வழங்கவும், அறுவை சிகிச்சை முறையை மறுவரையறை செய்யவும் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம். இந்த சாதனை மூலம் இந்தியா மட்டுமல்லாது உலக அளவிலும் ரோபோடிக் அறுவை சிகிச்சைகள் மற்றும் மேம்பட்ட பெண்கள் சுகாதாரப் பராமரிப்பில் எங்கள் மருத்துவமனை சிறந்து விளங்குகிறது என்பதை காட்டுகிறது என்று தெரிவித்தார்.

இது குறித்து நோயாளி கூறுகையில், என் கருப்பையில் 5 கிலோ எடையுள்ள நார்த்திசுக்கட்டி இருப்பதை அறிந்ததும், நான் பயந்து, அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாமல் தவித்தேன். இந்த நிலையில் ரோபோடிக் அறுவை சிகிச்சை பாதுகாப்பானதாகவும், விரைவாக குணமடையவும் உதவும் என்று மருத்துவர்கள் எனக்கு விவரமாக கூறினார்கள். அவர்கள் சொல்வது சரிதான் என்று எனக்கு தோன்றியது. எனவே நான் அதற்கு ஒப்புக் கொண்டேன். பின்னர் ரோபோடிக் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட விதத்தைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன், ஒரு நாளுக்குள் நடக்கவும், எதிர்பார்த்ததை விட மிக விரைவாக நான் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும் முடிந்தது. எனக்கு உடல்நலத்தையும் நம்பிக்கையும் அளித்ததற்காக சென்னை கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் மருத்துவர்கள் குழு மற்றும் ஊழியர்களுக்கும் சிகிச்சை பெற்றவர் தனது நன்றியினை தெரிவித்தார்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கிடையே மாவட்ட அளவில் ஓவிய போட்டி நடைபெற்றது இதில் மாலை தந்தி நாளிதழின் இணை ஆசிரியர் கரு.சந்துரு புதல்வன் ச.சாய் சச்சின் கலந்துகொண்டு ஓவியம் வரைந்து அசத்தினார். போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு பாபா மெட்ரிக் பள்ளி சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது..




## காரைக்குடி கழனிவாசலில் சாலை சேதமடந்துள்ளதால் தொடர் விபத்தில் சிக்கு பள்ளி மாணவர்கள்

சிவகங்கை, நவ.15-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசல் 1 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள இரட்டைக் குளத்திலிருந்து ஐயுளியம்மன் கோயில் வழியாகச் செல்லும் பிரதான சாலை சில தினங்களுக்கு முன்பு குடிநீர் குழாய் பதிப்பிற்காக சாலை உடைக்கப்பட்டு மோசமான நிலையில் இருந்துள்ளது இதன் அருகில் நகராட்சி தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது இங்கு வரும் பள்ளி மாணவர்களும் அவர்களை பள்ளி முடிந்து அழைத்து செல்ல வரும் பெற்றோர்களும் அவ்வப்போது விபத்தில் சிக்குவது வாடிக்கையாகியதால் அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அரசு துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவையில் ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் ஹைபெக் சிறப்பு கிளினிக் துவக்கம்

கோவை, நவ.15-

மேற்கு தமிழ்நாட்டில் புற்றுநோய் சிகிச்சை துறையில் ஒரு புதிய மைல்கல்லாக, பிரத்தியேக ஹைப்பர்தெர்மிக் இன்ட்ரா பெரிட்டோனியல் கீமோ தெரபிசிறப்பு கிளினிக், ஜி.குப்புசாமி .நாயுடு நினைவு (ஜி.கே. என்.எம்) மருத்துவமனையில் துவங்கப்பட்டது.

இந்த மையத்தை மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். ரகுபதி வேனுசாமி துவக்கி வைத்தார்.

புற்றுநோய் துறை தலைவர் டாக்டர். பி. சிவநேசன் உடனிருந்தார். இதுவரை 25 ஹை பெக்சிகிச்சைகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதால், ஜி.கே.என்.எம். மருத்துவமனை இப்பகுதியில் முன்னணி மையமாக திகழ்கிறது.

ஹைபெக் சிகிச்சை கருப்பை, குடல், பெருங் குடல், இரைப்பை உள்ளிட்ட வயிற்றுப் பகுதியில் பரவும் புற்று நோய்களுக்கு வழங்க ப்படும் நவீன சிகிச்சை முறையாகும். இதில் முதலில்

சைட்டோரிடக்டிவ் அறுவை சிகிச்சை (CRS) மூலம் புற்றுக் கட்டிகள் அகற்றப்பட்டு, பின்னர் கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையில் வயிற்றுக்குள் கீமோதெரபி செய்யப்படுகிறது. இது புற்றுநோய் செல்களை நேரடியாக அழிப்பதோடு பக்க விளைவுகளை குறைக்க உதவுகிறது.


இந்நிகழ்ச்சியில் டாக்டர். பிரவீன் ரவிசங்கரன் (அறுவை புற்றுநோயியல் நிபுணர்) மற்றும் டாக்டர். பி. அருள்ராஜ் (ரோபோடிக் மற்றும் ஹைபெக்அறுவை சிகிச்சை நிபுணர்) ஆகியோர்,

ஒரே கூரையின் கீழ் பரிசோதனை, சிகிச்சை மற்றும் பிந்தைய பராமரிப்பு வசதிகள் அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படுவது எங்கள் நோக்கம்

என்று தெரிவித்தனர்.

புதிய ஹைபெக்மையத்தில் அறுவை, புற்றுநோயியல், மயக்கமருந்து, தீவிர சிகிச்சை, பிசியோதெரபி, உணவியல் மற்றும் நோய்த்தடுப்பு நிபுணர்கள் ஒருங்கிணைந்து நோயாளிகளுக்கு முழுமையான பராமரிப்பை வழங்கவுள்ளனர். ஜி.கே.என்.எம். மருத்துவமனை, வயிற்றுப் புற்றுநோய்களின் முன்னேற்றத்தை தாமதப் படுத்தும் இந்த சிகிச்சை குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே உருவாக்கும் முயற்சிகளையும் தொடங்கியுள்ளது.

புதிதாக துவங்கப் பட்டுள்ள இந்த மையம், தென்னிந்தியாவில் ஹைபெக் சிகிச்சைக்கான முக்கிய மையமாக கோவை மாநகரின் மருத்துவ திறனை மேலும் உயர்த்தியுள்ளது.



■ மதுரை மாநகராட்சி மறைமலை அடிகளார் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் சிறப்பு குழந்தைகளுக்கான கற்றல் மையத்தில் பயிலும் மாணவர்களை ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், நேரில் சந்தித்து குழந்தைகள் தின வாழ்த்துக்களை தெரிவித்து மாணவர்களிடம் கலந்துரையாடினார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161